## மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்றில் அதிக அளவில் உபரி நீர் வெளியேற்றம்!

# பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஆய்வு!

## முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களுடன் மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திலிருந்து காணொலி மூலம் கலந்துரையாடினார்!

**சென்னை, ஆக. 4–**
**மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் அதிக அளவு உபரி நீரினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுடன் காணொலியில் உரையாடினார்.**

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:–

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால் உபரி நீர் திறந்துவிடப்படுவதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் 31.07.2024 அன்று காவிரி ஆற்றுப்படுகை மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தி பொதுமக்களை பாதுகாக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கினார். மேலும், கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு சென்று ஆயத்த நிலை, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் (02.08.2024) மாலை 4 மணி நிலவரப்படி, மேட்டூர் அணையிலிருந்து 1,30,000 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.8.2024) சென்னை, எழிலகத்திலுள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை வளாகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து, வெள்ள நிலைமை மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வெள்ள நிலைமை குறித்தும், மழை விபரம் குறித்தும், காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு, நிவாரண முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்கள், நிலை நிறுத்தப்பட்டுள்ள மீட்புப் படைகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2024) சென்னை, எழிலகத்திலுள்ள, மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் அதிக அளவு உபரி நீரினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து காணொலி வாயிலாக ஈரோடு, நாமக்கல், நாமக்கல், மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை துறை இயக்குநர் வி. மோகனசந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 1.54 கோடி செல்லிடப்பேசிகளுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்தி!

மேட்டூர் அணையிலிருந்து அதிக அளவு உபரி நீர் வெளியேற்றப்படுவதால், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு கருதி, பொதுவான எச்சரிக்கை நடைமுறை (CAP - Common Alert Protocol) மூலம் 1.54 கோடி செல்லிடப்பேசிகளுக்கு எச்சரிக்கை குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையின் காரணமாக பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உடனடியாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளும் வகையில், தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினைச் சார்ந்த 470 வீரர்கள் நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், மயிலாடுதுறை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் முன் கூட்டியே நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையினைச் சார்ந்த 2 குழுக்கள் (60 நபர்கள்) நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விபரங்கள் குறித்து முதலமைச்சர் கேட்டறிந்தார்.

### மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள்!

மேலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து மக்களை பாதுகாப்பாக கொண்டு வந்து 26 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 4 மாவட்டங்களில் உள்ள இந்த 26 முகாம்களில் 596 குடும்பங்களைச் சேர்ந்த 1621 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்த முதலமைச்சர் அவர்கள், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், நகராட்சி துவக்கப்பள்ளி நிவாரண முகாம் மற்றும் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் வட்டம், செங்குந்தர் திருமண மண்டப நிவாரண முகாம் ஆகிய நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசி, அவர்களுக்கு அங்கு போதுமான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டறிந்தார். அப்போது முகாம்களில் தங்கியுள்ள மக்கள், தங்களுக்கு தேவையான உணவு, மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் முகாம்களில் செய்து தரப்பட்டுள்ளது என்றும், அதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்ராஜகோபால் சுன்கரா, நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ச.உமா, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார் ஆகியோரிடம் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கள நிலவரம் குறித்து கேட்டறிந்து, இந்த தண்ணீர் திறப்பின் காரணமாக ஒரு உயிரிழப்பு கூட ஏற்படாமல் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும், உரிய நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, குடிநீர் வசதி, மருத்துவ வசதி, படுக்கை வசதி, குழந்தைகளுக்கு தேவையான பால், ரொட்டி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

### முகாம்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரில் செல்ல வேண்டும்!

அத்துடன், இரவு நேரங்களில் மிகவும் எச்சரிக்கையாக பணியாற்ற வேண்டும் என்றும், முகாம்களுக்கு மாவட்ட அளவில் முக்கிய அதிகாரிகளை பொறுப்பு அதிகாரிகளாக நியமித்து கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தொடர்ந்து முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

### ஆடிப்பெருக்கை முன்னிட்டு பாதுகாப்பு!

காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் நீர்வரத்து அபாயகரமான அளவிற்கு உயர்ந்து வரும்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, எச்சரிக்கை செய்து, அவர்களை பாதுகாப்பாக முகாம்களுக்கு அழைத்து வரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும், நாளை ஆடிப்பெருக்கை முன்னிட்டு, மக்கள் கூடும் இடங்களில் காவல்துறை, தீயணைப்பு துறை மூலம் போதிய பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மேலும், இன்றைய காணொலி வாயிலான ஆய்வின்போது, கேரள மாநிலத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டசமீரன் அவர்களிடம் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கை விபரங்களை முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டிலிருந்து சென்ற மருத்துவக் குழு மற்றும் பேரிடர் மீட்புக் குழுவினரின் பணிகள் குறித்தும், தேவைப்படும் கூடுதல் வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின் போது, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.ஆர்.ராமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், எஸ்.கே. பிரபாகர், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, சமூக பாதுகாப்பு திட்ட ஆணையர் க.வீ. முரளிதரன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் வி.மோகனச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### நாடு முழுவதும் பெட்ரோலிய நிலையங்களில்

## வாடிக்கையாளர்கள் சேவை - டீலர்கள் பிரச்சினைகளை ஆய்வு செய்ய குழு அமைக்கப்படுமா?

### மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் கேள்வி!

நாமக்கல், ஆக.4-

டெல்லியில் நாடாளுமன்றத்தில் மாநிலங்களவை கூட்டுத் தொடர் கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு, நாடு முழுவதும் உள்ள பெட்ரோலிய விற்பனை நிலையங்களில் வாடிக்கையாளர்கள் சேவைத் தர நடவடிக்கைகள் மற்றும் டீலர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆய்வு செய்ய குழு அமைக்கப்படுமா ? என கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசு நாடு முழுவதும் உள்ள பெட்ரோலிய டீலர் மார்ஜின் திருத்த திட்டமிட்டுள்ளதா? இது தொடர்பாக பங்குதாரர்களிடமிருந்து குறைகளை பெற்றுள்ளதா? நாடு முழுவதும் உள்ள பெட்ரோலிய விற்பனை நிலையங்களில் வாடிக்கையாளர்கள் சேவை குறித்த நடவடிக்கைகள் மற்றும் டீலர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆய்வு செய்ய குழு அமைக்க பரிசீலித்து வருகிறதா ? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, பெட்ரோல் மற்றும் டீசல் பொது மற்றும் தனியார் துறைகளில் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களால் (OMCs) நடத்தப்படும் சில்லறை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. 01.07.2024 நிலவரப்படி, நாட்டில் 90,639 சில்லறை விற்பனை நிலையங்கள் உள்ளன, அவற்றில் 90% பொதுத் துறை நிறுவனங்களுக்குச் சொந்தமானது மற்றும் மீதமுள்ளவை நிறுவனங்கள் தனியார் துறைக்குச் சொந்தமானது.



பெட்ரோல் மற்றும் டீசலின் சில்லறை விற்பனை கட்டுப்பாடு நீக்கப்பட்டு, டீலர் மார்ஜின்கள் உட்பட அவற்றின் விலைகள் தொடர்பான முடிவுகளை அந்தந்த நிறுவனங்களே எடுக்கின்றன. எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களுக்கு, சில்லறை விற்பனையில் டீலர் மார்ஜினில் முதன்மையாக இயக்கச் செலவுகள், மனித ஆற்றல் செலவுகள், ஊழியர்களின் ஊதியங்கள், வணிக வருமானம் போன்றவை அடங்கும். டீலர் மார்ஜின் கடந்த ஆகஸ்ட் 2017 ல் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களால் திருத்தப்பட்டது.

இந்த திருத்தம் அதிக விகிதத்தில் இருந்ததால் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் டீலர்கள் மூலம் ஊழியர்களுக்கான ஊதியம். திருத்தத்திற்குப் பிறகு, எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் RO டீலர்களுக்கு இந்த நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை ஊழியர்களுக்கு வழங்க அறிவுறுத்தியது. டீலர்களால் திருத்தப்பட்ட ஊதியங்களை செயல்படுத்துவதை உறுதிசெய்ய, எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் 2012 இல் பொருத்தமான உட்பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

திருத்தப்பட்ட டீலர் மார்ஜின்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட நிலையில், பல டீலர் கூட்டமைப்புகள் பல்வேறு நீதிமன்றங்களில் அதிக ஊதியம் வழங்குவது தொடர்பான திருத்தங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தன. ஒரு டீலர் சங்கம் தாக்கல் செய்த மனுக்களை முடிவு செய்யும் போது, ஜனவரி 2022 ல், டெல்லி உயர்நீதி மன்றத்தில் ல் திருத்தங்களை உறுதி செய்தது. இருப்பினும், டெல்லி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் டீலர் சங்கங்கள் சிறப்பு விடுப்பு மனுவை தாக்கல் செய்தன.

டீலர் கமிஷன் திருத்தம் தொடர்பான விவாதங்கள் மற்றும் இருதரப்பு பேச்சு வார்த்தைகள் மற்றும் RO டீலர்கள் கூட்டமைப்புகளுக்கு இடையே நடத்தப்படுகிறது. மீள்திருத்தத்தைப் பாதிக்கும் நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இதுபோன்ற ஈடுபாடுகளுக்கு ஆதரவாக உள்ளது. டீலர் ஃபெடரேஷன்களிடமிருந்து டீலர் மார்ஜினைத் திருத்துவது தொடர்பாக அரசாங்கம் பல பிரதிநிதித்துவங்களைப் பெற்று, தேவையான நடவடிக்கை குறித்து பொதுத்துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

பெட்ரோலிய சில்லறை விற்பனை நிலையங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்யவும், சேவைகளின் தரத்திற்காகவும், புதிய தலைமுறை எரிபொருட்களான பிரீமியம், மாற்று எரிபொருள்கள் இயற்கை எரிவாயு (CNG), உயிர் வாயு (CBG), மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள் (EVCS) உள்ளிட்ட சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

மேலும் காசோலை, காப்பீடு, கூரியர் சேவை, வாகன சேவை மையம், மளிகைக் கடைகள், உணவு மற்றும் பானங்கள் விற்பனை நிலையங்கள் போன்ற எரிபொருள் அல்லாத வணிகங்களை ஊக்குவித்து வருகின்றன. சில்லறை விற்பனை நிலையங்களில் சேவைகளின் தரத்தை மேம்படுத்த, OMCகள் மார்க்கெட்டிங் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களை 2012 உருவாக்கி, சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்க டீலர்களை ஊக்குவிக்கின்றன.

மக்கள் சாசனம் உருவாக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன்ஸ் பரிந்துரைக்கப்பட்டதால், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் நுகர்வோருக்கு தரமான, தடையில்லா எரிபொருள் விநியோக சேவை, வேலை நேரம், தரம் மற்றும் அளவுகளை பராமரித்தல், குறைந்தபட்ச வசதிகள், இருப்பு நிலைகளை பராமரித்தல், பாரபட்சமற்ற சேவையை வழங்குவதோடு,

எப்போதும் நியாயமான விலையில் எரிபொருள் கிடைக்க வழிவகை செய்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் தொகுதி, பரமத்தி ஒன்றியம், இரும்பு பாலம் மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு சான்றுகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் தன்ராசு, ஊராட்சி மன்ற தலைவர் பூங்கொடி குணசேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### வயநாடு நிலச்சரிவு: மக்களின் தேவைகள் அறிந்து உதவ தமிழ்நாடு தயார்!

## கேரளாவுக்கு சென்றுள்ள 2 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழுவினரின் பணிகள் குறித்து கேட்டறிந்தேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஆக.4 -

வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள் என்னென்ன என்பதை அறிந்து உதவத் தயாராக இருக்கிறது என்று அங்குள்ளவர்களிடம் கூறும்படியும், கேரளாவுக்குச் சென்றுள்ள 2 ஐ.ஏ.எஸ். அதிகாரி குழுவினரிடம் அறிவுறுத்தியதும் அவர்களின் பணிகள் குறித்தும் கேட்டறிந்தேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிந்துள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**வயநாடு நிலச்சரிவு** –Wayanad Landslide **நிவாரணப் பணிகளுக்காகக் கேரளாவுக்குச் சென்றுள்ள நமது இரண்டு** IAS **அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் முழு முனைப்புடன் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

**அவர்களது பணிகள் குறித்துக் கேட்டறிந்ததோடு, தவிக்கும் கேரள மக்களின் தேவைகள் என்னென்ன என்பதை அறிந்து உதவத் தமிழ்நாடு தயாராக இருக்கிறது என்பதை அங்குள்ளவர்களிடம் கூறும்படி அறிவுறுத்தியுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும் மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர் இரா. இலட்சுமணன், பள்ளி மாணவ – மாணவிகளுக்காக மக்களின் கோரிக்கைகளை ஏற்று கோலியனூர் கிழக்கு ஒன்றியம், கல்லப்பட்டு வளவனூர் மார்க்கமாக விழுப்புரம் வரை செல்லும் கூடுதல் பேருந்து வழிதடத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் பி.தெய்வசிகாமணி, ஒன்றியக் குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், இரா.கேசவன், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், மாவட்ட ஜி.தவமணி, ஒன்றிய பொருளாளர் சௌந்தரராஜன், நரையூர் ஜெயபால்,ஸ்ரீதர், ஜெயந்தி ராஜகணேஷ், தேவி வேலு, மணிவேல், ஜெயமாலினி ஆறுமுகம், கிளைக் கழக செயலாளர்கள் பழனி, பாரதி, பிரபு, லோகநாதன், கிளை பிரதிநிதிகள் பிரேமா நடராஜன், பழனி, மனோகர், ஜானகிராமன், தாமோதரன், கமலக் கண்ணன், புகழ்ச்செல்வன், காண்டீபன், அசோக், சதீஷ், கார்த்தி, மாணவர் அணி குமரவேல், கோபால் தாஸ், அருள், பூமிநாதன், தேவன், ராஜகுமாரி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.